6 பாடம்

# முதலிடம்!

***இன்றைக்குக் காலையில் என்ன உணவைச் சாப்பிடுவது, எதை உடுத்துவது, வீட்டிலுள்ளோரிடம் எதைப் பேசுவது எனப் பலவிதமான தேர்வுகளை நாம் தெரிந்துகொள்கிறோம். ஆனால், ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு வினாடியிலும் நம் மனதில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதே சரியான தேர்வு.***

நாம் தேவனிடம் ஜெபிக்கும்போது, தேவனே நான் உம்மையே உண்மையாய் நேசிக்கிறேன் என்று சொல்வதுண்டு. தேவனை நாம் உண்மையாக நேசிப்பதைக் காட்ட பல வழிகள் உண்டு. தேவனுக்கே தன் வாழ்வில் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு வினாடியிலும் முதலிடம் கொடுக்கவேண்டும். இவ்வாறுதான் தானியேல் தன் மனதில் தீர்மானித்திருந்தார். தேவனை எவ்விதம் தொழ வேண்டும் என்பதை நன்கு தெரிந்துவைத்திருந்தார். கடிகாரம் வேலைசெய்வது போன்று தானியேலும் காலை, மதியம், இரவு என முறையாக மூன்றுவேளையும் ஜெபித்து வந்தார். எவருக்காகவும் எதற்காகவும் தன் வழக்கத்தை ஒருபோதும் தானியேல் மாற்றிக் கொள்ளவில்லை. தேவனுக்கே தன் வாழ்வில் முதலிடம் தந்து வாழ்ந்து வந்தார்.

மூன்று வேளையும் தானியேல் தன் வழக்கத்தின்படியே மேல் அறையிலே பலகணிகளைத் திறந்துவைப்பார். எருசலேமுக்கு நேராக தானியேல் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்துவார்.

இவ்விதமாக தானியேல் ஜெபிக்கும்போது யாவருக்கும் நன்கு தெரிந்தது. மேதியனாகிய தரியு பாபிலோனில் ராஜாவாகப் பொறுப்பேற்றார்.

தன்னுடைய ஆட்சி சிறந்து விளங்குவதற்காக 120 தேசாதிபதிகளை ஏற்படுத்தினார்.



**மனன வசனம்**

**தானியேல் ... தினம் மூன்று வேளையும்... ஜெபம்பண்ணி.. ஸ்தோத்திரம் செலுத்தினான்.**

**தானியேல் 6:10.**

ராஜாவுக்கு நஷ்டம் ஏற்பட்டு விடாதபடி, அந்த அதிபதிகளைக் கண்காணிக்கும்படிக்கு அவருக்கு மேலாக மூன்று அதிகாரிகளை தரியு நியமித்தார். இவர்களில் தானியேலும் ஓர் உயர் அதிகாரியாக இருந்தார்.

அதுவுமின்றி எல்லா அதிகாரிகளுக்கும் மேலான ஓர் அதிகாரியாக தானியேல் சிறந்திருந்தார்.

தானியேல் தேவனுக்குப் பயந்து நல்ல ஒரு வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அவருடைய வாழ்க்கை பிறருக்கு நல்ல ஒரு முன்மாதிரியாக இருந்தது. தானியேல் தனது தேவனின் மேலே அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். அதுபோன்றே தேசத்திலும் நல்ல ஓர் அதிகாரியாகப் பணிபுரிந்து



வந்தார். இதனால் ராஜா அவரை மிகவும் முக்கியமான ஓர் அதிகாரியாக நியமித்திருந்தார்.

இவ்வாறு தானியேல் மிக முக்கியமான அதிகாரியாயிருந்தது, மற்ற அதிகாரிகளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஏனெனில், தங்களது தவறுகளை தானியேல் கண்டு பிடித்துவிடுவாரே எனப் பயந்தனர்.

எனவே, தானியேலிடம் ஏதேனும் குற்றத்தைக் கண்டு பிடித்து அவரைப் பதவியிலிருந்து ஒரேயடியாக விலக்கி விடலாம் என்று திட்டமிட்டு, அதற்காகத் தீவிரமாக முயற்சியும் செய்தனர். ஆனால் ஒரு குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

எனவே, 30 நாட்கள் ராஜாவைத் தவிர வேறு எவரையும் எவரும் வணங்கக்கூடாது என்று ஒரு கட்டளையை ராஜா ஏற்படுத்துமாறு செய்தார்கள் . (இவர்களது தந்திரம் தெரியாததால்) அக்கட்டளையை மீறுபவர்கள் சிங்கக்கெபிக்குள் போடப்படவேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டது.

# செய்தி

**என் வாழ்வில் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும்போது நான் தேவனைத் தொழுகிறேன்.**

தானியேலுக்கான சதி இது என, ராஜாவுக்குத் தெரியாது.

இருப்பினும் தானியேல் முன்போலவே ஜெபிப்பது கண்டு, ராஜாவிடம் தானியேலைப் பற்றிப் புகார்செய்தனர். ராஜாவுக்கு அந்தத் தீயவர்களின் சூழ்ச்சி புரிந்தது.

தானியேலைக் காப்பாற்ற இனி தரியு ராஜாவுக்கு வேறெந்த வழியுமில்லை.

ராஜா மிகவும் வேதனைப் பட்டார். தீயோரின் சதி, ராஜாவின் கட்டளை யாவையும் தானியேலுக்குத் தெரிய நேர்ந்தது. ஆனாலும் தானியேல் கலங்கவில்லை. தன் வழக்கத் தின்படியே மூன்று நேரமும் ஜெபித்து வந்தார்.

என் செல்லமே! தானியேலைப் போல நீயும் தேவனுக்கே முதலிடம்கொடு.

**செய்முறை: தேவனுக்கு நமது வாழ்வில் நாம் எந்த இடத்தைத் தரவேண்டும்? இதற்கான விடையைக் கண்டறிய இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளுக்குப் பொருத்தமான எழுத்தை கோடுகளில் எழுதவும்.**

**பதில் 6**

___ ___ ___ ___ ___ ___ ___

⏩ ▲ ● ▞ ⏮ ⏩ ⏸

___ ___ ___ ___ ___

⏭ ▲ ■ ⏪ ▼



| த | ம் | ட | ே | க் | மு | க | லி | வ | னு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ▲ | ▼ | ⏪ | ⏩ | ⏮ | ⏭ | ⏸ | ■ | ● | ▞ |